1991 அக்டோபர் 3]

கோவிந்தநல்லூருக்கு பேருந்து வசதி.

*143—

199.— திரு. இரா. தாமரைக்கனி :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

காமராஜர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் தொகுதி வத்திராயிருப்பு ஒன்றியம், கோவிந்தநல்லூருக்குப் பேருந்து வசதி செய்து தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 144, திரு ம. தனபால், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

முள்ளிப்பாக்கம் ஏரியைச் சீர்செய்தல்.

144—

*226— திரு. ம. தனபால் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருப்போரூர் ஒன்றியம், முள்ளிப்பாக்கம் ஏரியில் உடைப்பு ஏற்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அது எப்பொழுது சீர் செய்யப்படும்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) திருப்போரூர் ஒன்றியம், முள்ளிப்பாக்கம் ஏரியில் 1990 ஆம் ஆண்டு ஏற்பட்ட உடைப்பைச் சரி செய்ய ஏறத்தாழ ரூ. 27,000 என்ற அளவில் கரை ஒன்று போடப்பட்டது. அதற்குப் பின்னாலே நிரந்தரமாக அதைச் சீர் செய்வதற்கு ரூ. 1.33 இலட்சம் என்ற அளவிலே பணிகள் தொடங்கப்பட்டு அந்தப் பணிகள் நடைபெற்று வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10.20

திரு. ம. தனபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது தொகுதியினுடைய சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பணி மழைக்காலக் கூட்டத் தொடருக்கு முன்பாக முடிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அக்டோபர் மாதத்திற்குள்ளாக அந்தப் பணி முடிக்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா. 145. திரு. எஸ். எஸ். ராமசுப்பு. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

ஊத்துமலையில் துணை மின்நிலையம்.

145—
*486—திரு. எஸ். எஸ். ராமசுப்பு :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஆலங்குளம் ஒன்றியம், ஊத்துமலையில் துணை மின்நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வேலை துவங்கும்?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே;

(அ) ஆம்.

(ஆ) 1992-93ஆம் ஆண்டில் பணிகள் துவங்கும்.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊத்துமலைப் பகுதியில் ஒரு துணை மின் நிலையம் அமைப்பதாக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது சொல்லி விளம்பரங்கள் எல்லாம் செய்தார்கள். ஆனால் அப்போது கிடப்பில் போட்டுவிட்டார் இப்போது ஆம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மிக்க மகிழ்ச்சி. அதே சமயத்தில் இந்தப் பகுதியில் சுமார் 33 பகுதிகளில் உள்ள கிராமங்களில் விவசாயத்தையே நம்பி வாழும் மக்கள்